***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2014 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

பிற்பகல் 2–40

6. அறிவிப்பு

தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2014 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*